உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 29.07.2026 • மலர் 04 • இதழ்: 210 • புதன் • Edition : Nagercoil • 29.07.2026 • Vol : 04 • Issue : 210 • Page : 4 • Rs. 5/-

# தமிழக முதல்வருக்கு கேரள முதல்வர் கடிதம்

திருவனந்தபுரம்: ஜூலை.29

பாறைகள், கருங்கல் ஜல்லி உள்ளிட்டவற்றை கேரளாவுக்குக் கொண்டு செல்வதற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை தளர்த்துமாறு தமிழக முதல்வர் விஜய்க்கு கேரள முதல்வர் வி.டி. சதீசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக முதல்வர் விஜய்க்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், "கடந்த 9ம் தேதியிட்ட அரசிதழ் அறிவிப்பு எண் 306ன் மூலம், மாநிலங்களுக்கு இடையேயான கருங்கல் பாறைகள், கருங்கல் ஜல்லி உள்ளிட்ட கட்டுமானப் பொருட்களின் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும் விதிமுறைகளை தமிழக அரசு அறிமுகப் படுத்தியுள்ளது என்பதை நான் அறிவேன். இதன் காரணமாக, திருநெல்வேலி, தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்களில் இருந்து கேரளாவுக்குக் கொண்டு வரப்படும் பாறைகள், கருங்கல் ஜல்லி ஆகியவற்றின் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. கேரளாவில் பல தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களைச் செயல்படுத்தத் தேவையான கற்களுக்கான முக்கிய ஆதாரமாக இம்மாவட்டங்கள் நீண்ட காலமாக திகழ்ந்து வருகின்றன.

பெரிய அளவிலான உள்கட்டமைப்புப் பணிகளுக்குத் தேவையான தரமான கற்கள் கேரளாவில் குறைந்த அளவிலேயே கிடைக்கின்றன என்பது உங்களுக்கும் தெரியும். எனவே, தற்போது நடைபெற்று வரும் தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களுக்குத் தேவையான பொருட்களில் கணிசமானவை தமிழ்நாட்டின் அண்டை மாவட்டங்களில் இருந்தே பெறப்படுகிறது.

மாநிலங்களுக்கு இடையேயான போக்குவரத்தின் மீதான கட்டுப்பாடுகள் விநியோகச் சங்கிலியைப் பாதித்து, கட்டுமானப் பணிகளைத் தடை செய்துள்ளதோடு, மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பல திட்டங்களை முடிப்பதில் தாமதம் ஏற்படும் அபாயத்தையும் உருவாக்கியுள்ளன.

இந்த தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்கள் கேரளாவுக்கு மட்டுமல்லாது, ஒட்டுமொத்த தென்னிந்தியாவுக்கும் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவை. இவை பிராந்திய இணைப்பை வலுப்படுத்தவும், சரக்குப் போக்குவரத்துத் திறனை மேம்படுத்தவும், வர்த்தகம் மற்றும் சுற்றுலாவை எளிதாக்கவும், இரு மாநிலங்களிலும் உள்ள முக்கிய பொருளாதார மையங்களுக்கான அணுகலை அதிகரிக்கவும் உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், இவை விழிஞ்சம் சர்வதேச துறைமுகம் மற்றும் வல்லார்படம் சர்வதேச கன்டெய்னர் பரிமாற்ற முனையம் ஆகியவற்றுக்குத் தடையற்ற இணைப்பை வழங்குவதன் மூலம், தென்னிந்தியாவின் பொருளாதார வளர்ச்சி மற்றும் போட்டித்தன்மைக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளிக்கும்.

உங்கள் அரசின் கொள்கைக்குப் பின்னால் உள்ள நோக்கங்களை நான் முழுமையாக மதிக்கிறேன். அதேநேரத்தில், தமிழக அரசின் நோக்கத்துக்கு பாதிப்பு ஏற்படாத வகையில், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த உள்கட்டமைப்புத் திட்டங்களின் நியாயமான தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய ஒரு சமச்சீரான அணுகுமுறையை உருவாக்க முடியும் என்றும் நான் உறுதியாக நம்புகிறேன்.

கேரளாவில் நடைபெற்று வரும் தேசிய நெடுஞ்சாலை மற்றும் பிற முக்கிய உள்கட்டமைப்புத் திட்டங்களுக்குத் தேவைப்படும் கருங்கல் ஜல்லி தடையின்றி கொண்டு செல்லப்படுவதை உறுதி செய்யும் வகையில், தகுந்த தளர்வுகளை அளிப்பது அல்லது பொருத்தமான நடைமுறையை உருவாக்குவது குறித்து பரிசீலிக்குமாறு கோருகிறேன்." என தெரிவித்துள்ளார்.








## கருங்கல் பஸ் நிலைய பணிகள் மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு




நாகர்கோவில், ஜூலை.29

கிள்ளியூர் வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் மாவட்ட நீர்வளத்துறை மற்றும் பேரூராட்சிகளின் சார்பில் நடைபெற்றுவரும் வளர்ச்சித்திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பின்னர் அவர் தெரிவிக்கையில் :–

கிள்ளியூர் தொகுதிக்குட்பட்ட கருங்கல் தேர்வு நிலை பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் ரூ.5.22 கோடி மதிப்பில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் பேருந்து நிலையம் மேம்பாடு செய்ய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில் கருங்கல் பேருந்து நிலைய கட்டுமான பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தற்போது இப்பேருந்து நிலையத்தில் முதல் தளத்தில் தரைஓடுகள் பதிக்கும் பணி, குழாய்கள் அமைக்கும் பணி, மற்றும் மின்சார பணிகள் நடைபெற்று வருகிறது. இரண்டாவது தளத்தில் கட்டுமான பணிகள் மற்றும் பூச்சு வேலைகள் நிறைவடைந்துள்ளது. மேலும் பயணிகள் காத்திருக்கும் பகுதியில் தூண்கள் அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. கழிப்பறைகளை பிற இடங்களில் கட்டுமாறும் பயணிகளின் வசதிக்கேற்ப பேருந்து நிலையத்தினை கட்டமைக்குமாறும் உதவி இயக்குநர் பேரூராட்சிகள், செயல் அலுவலர், பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாருக்கு அறிவுறுத்தப்பட்டது.

இப்பணிகள் மேற்கொள்வதன் மூலம் அருகாமையில் உள்ள பேரூராட்சிகள், ஊராட்சி பகுதிகளில் உள்ள சுமார் 7000 மக்கள் தினசரி பயன்பெறுவார்கள். எனவே இப்பணிகளை துரிதமாக மேற்கொள்வதோடு, கட்டுமான பணிகள் தரமானதாகவும், உறுதி தன்மையினை உறுதி செய்திட துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும் பணிகளை விரைந்து முடித்து பொது மக்களின்பயன்பாட்டிற்கு கொண்டு வர அறிவுறுத்தப்பட்டது.

தொடர்ந்து ரூ.6.5 கோடி மதிப்பில் கருங்கல் கிளை கால்வாய் மற்றும் அதன் சார்பு வழங்கு வாய்க்கால்களை புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது சிமெண்ட் கான்கிரீட் லைனிங், பூச்சு வேலைகள், தடுப்பு சுவர் அமைக்கும் பணிகள் உள்ளிட்ட பணிகள் நிறைவடைந்துள்ளது. மீதமுள்ள பணிகளை விரைந்து முடித்து பொது மக்களின்பயன்பாட்டிற்கு கொண்டு வர சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் கூறினார்.

நடைபெற்ற ஆய்வுகளில் நீர் வளத்துறை செயற்பொறியாளர் வசந்தி, கிள்ளியூர் வட்டாட்சியர் ராஜசேகர், கருங்கல் தேர்வுநிலை பேருராட்சி செயல் அலுவலர் சத்யதாஸ், செயற்பொறியாளர், துறை அலுவலர்கள், பணியாளர்கள், பொதுமக்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி மாவட்டம் கயத்தார் ஊராட்சி ஒன்றியம் பன்னீர்குளம் கிராமத்தில் தமிழக அரசின் சாதனைக மற்றும் சிறப்புத் திட்டங்கள் குறித்து செய்தி மக்கள் தொடர்புத்துறைபின் சார்பில் வைக்கப்பட்டிருந் புகைப்படக்கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டனர்.




திருநெல்வேலி மாவட்டம் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவிற்கு கலந்து கொள்வதற்காக நேற்று தூத்துக்குடி வாகைகுளம் விமான நிலையத்திற்கு வருகை புரிந்த தமிழ்நாடு ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகருக்கு மாவட்ட ஆட்சியர் விஷு மகாஜன், புத்தகம் வழங்கி வரவேற்றார்.

## அசாம் மழை, வெள்ளம்: உயிரிழந்தோர் எண்ணிக்கை 68 ஆக அதிகரிப்பு

குவாஹாட்டி: அசாம் மாநிலத்தின் சிவசாகர் உள்ளிட்ட 25 மாவட்டங்களில் கடந்த சில நாட் களாக பெய்த கன மழை காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 68 ஆக அதிகரித்துள்ளது. இந்த வெள்ளத்தால் 11 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்டுள்ள மாவட்டங்கள்:

கோல்பாரா, காக்சார், லக்கிம்பூர், தீமாஜி, திப்ருகர், ஜோர்ஹட், பிஸ்வநாத், சாராய்தியோ, நல்பாரி, பஜாலி, சிராங், கோக்ரஜார், பொங்கைகோன், பக்சா, சிவசாகர், தர்ரங், சோனித்பூர், தின்சுகியா, உதல்குரி, கோலாகாட், நாகோன், கர்பி அங்லோங்,கம்ருப்,ஹோஜாய் உள்ளிட்ட 25 மாவட்டங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. 600க்கும் மேற்பட்ட கிராமங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

மழை வெள்ளத்தால் 11 லட்சத்து 44 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக முதல்வர் ஹிமந்த பிஸ்வா சர்மா தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "11 லட்சத்து 44 ஆயிரத்து 733 பேர் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். மாநில அரசு சார்பில் 215 தற்காலிக முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில், 71 ஆயிரத்து 223 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மழை, வெள்ளம் காரணமாக இதுவரை 31 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 5.65 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மழையால் பாதிக்கப்பட்டவர்கள் தங்குவதற்கு வசதியாக மாவட்ட நிர்வாகங்கள் சார்பில் நிவாரண முகாம்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு தலா ரூ.4 லட்சம் நஷ்ட ஈடு அறிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளப்பெருக்கால் 1,180 வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளன. 9 ஆயிரத்து 926 வீடுகள் பகுதி அளவில் சேதமடைந்துள்ளன. வீடுகளில் இருந்து 29 ஆயிரத்து 983 பேர் பத்திரமாக வெளியேற்றப்பட்டுள்ளனர்." என தெரிவித்துள்ளார்.

இதனிடையே, அசாம் எம்.பி.க்களை பிரதமர் நரேந்திர மோடி இன்று நேரில் சந்தித்துப் பேசினார். இந்த சந்திப்பு குறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "அசாம் மாநிலத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து, மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் நிலவும் வெள்ள நிலைமை குறித்து கலந்துரையாடினேன்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்குவதில் மத்திய அரசு, அசாம் மாநில அரசுடன் இணைந்து நெருக்கமாகப் பணியாற்றி வருகிறது. அனைவரின் பாதுகாப்பு மற்றும் நலனுக்காக நான் பிரார்த்திக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

## டெல்லியில் கர்நாடக எம்.பி.க்களுடன் டி.கே.சிவகுமார் ஆலோசனை




புதுடெல்லி: கர்நாடக முதல்வர் டி.கே.சிவகுமார் நேற்று காலையில் டெல்லி சென்றார். மேகேதாட்டு அணை திட்டம், மகதாயிஅணை திட்டம் ஆகியவற்றுக்கு மத்திய அரசின் அனுமதி பெறுவது குறித்து நீர்ப்பாசன துறை அமைச்சர் ராமலிங்க ரெட்டி, தலைமை வழக்கறிஞர் சசிகிரண் ஷெட்டி, உச்ச நீதிமன்ற வழக்கறிஞர்கள் ஆகியோருடன் ஆலோசனை நடத்தினார்.

பிறகு காங்கிரஸ் தேசிய தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவின் இல்லத்தில் மேகேதாட்டு விவகாரம், காவிரி நீர் பங்கீட்டு பிரச்சினை, வறட்சி நிலவரம் குறித்து கர்நாடக காங்கிரஸ் எம்.பி.க்களுடன் ஆலோசனை நடத்தினார். இதையடுத்து மாலையில் கர்நாடகாவை சேர்ந்த அனைத்துக்கட்சி எம்பிக்கள் கூட்டத்தை கூட்டினார்.

அப்போது டி.கே.சிவகுமார், "கர்நாடகாவில் நிலவும் வறட்சி குறித்து மத்திய அரசுக்கு தெரிவித்து வறட்சி நிவாரண நிதியை பெற அனைவரும் குரலெழுப்ப வேண்டும். அதேபோல் காவிரி நதிநீர் பங்கீட்டு சிக்கல், மேகேதாட்டு விவகாரம் ஆகியவை குறித்து நாடாளுமன்றத்தில் அனைவரும் ஒருமித்து குரலெழுப்ப வேண்டும்" என கேட்டுக்கொண்டார்.

கர்நாடக பவனில் நடந்த இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பாஜகவை சேர்ந்த மத்திய அமைச்சர்கள் பிரஹலாத் ஜோஷி, ஷோபா கரந்தலாஜே, துணை முதல்வர் பரமேஷ்வர், காங்கிரஸ் எம்.பி ஜெய்ராம் ரமேஷ் உள்ளிட்டோரும் பங்கேற்றனர்.



சுவாமிதோப்பு அய்யா வைகுண்டர் அன்புவனத்திற்கு சீக்கிய மத தலைவர்கள் வருகை. சுவாமிதோப்பு அய்யாவைகுண்டர் அன்புவனத்திற்கு பஞ்சாப் லூதியானாவின் நிகாங்சிங் தலைவர் ஜதேதார் சுக்தேவ் சிங் ,பாபா குருமேல் சிங் ,குறி சிங்,பகுஜன் திராவிட கட்சி தேசிய தலைவர் சர்தார் ஜீவன் சிங், கொற்கை பழனி சிங், வழக்கறிஞர் செல்வா சிங் ,மெசையா சிங் ஆகியோர்கள் நேற்று அன்புவனத்தில் குரு மகா சன்னிதானம் பால பிரஜாபதி அடிகளாரை சந்தித்து அய்யா வைகுண்டர் வழிபாட்டு முறை பற்றியும் அய்யாவழி பற்றியும் கேட்டறிந்தனர் .




# குற்றாலத்தில் தமிழக ஆசிரியர் கூட்டணி சார்பில் மாநிலப் பொதுக்குழுக் கூட்டம்

தென்காசி, ஜூலை.29

தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் உள்ள கலைவாணர் அரங்கத்தில் தமிழக ஆசிரியர் கூட்டணி சார்பில் மாநிலப் பொதுக்குழுக் கூட்டம் மாநிலத் தலைவர் எழிலரசன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஆசிரியர்களின் நலன் சார்ந்த பல்வேறு முக்கியக் கோரிக்கைகள் தீர்மானங்களாக நிறைவேற்றப்பட்டன. குறிப்பாக ஆசிரியர்களின் பங்களிப்பு இல்லாத பழைய ஓய்வூதியத் திட்டத்தை மீண்டும் உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் இடைநிலை ஆசிரியர்களின் ஊதிய முரண்பாடுகளைக் களைந்து மத்திய அரசு ஆசிரியர்களுக்கு இணையான ஊதியத்தை வழங்கிட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. கூட்டத்திற்குப் பின் செய்தியாளர்களைச் சந்தித்த அகில இந்தியச் செயலாளர் அண்ணாமலை நீட் தேர்வு வினாத்தாள் கசிவு என்பது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதைக் கண்டித்து பல போராட்டங்கள் நடைபெற்றும் இன்னும் முறையான தீர்வு கிடைக்கவில்லை. மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்க மறுத்த மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானை பதவி விலகச் செய்தது இளைஞர்களின் தொடர் போராட்டமே ஆகும். அந்த வகையில் தமிழ்நாட்டிற்கு நீட் தேர்வில் இருந்து முழுமையான விலக்கு அளிக்கப்பட வேண்டும் என்பதில் தமிழக ஆசிரியர் கூட்டணி உறுதியாக உள்ளது என்று தெரிவித்தார். கடந்த காலத்தில் ஆட்சி செய்தவர்கள் அரசு ஊழியர்களின் நம்பிக்கையை முற்றிலும் இழந்துவிட்டனர். அவர்கள் அளித்த வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றவில்லை இனி அவர்களைப் பற்றிப் பேசி எந்தப் பலனும் இல்லை. ஊழலுக்கு எதிரான அரசு எனத் தமிழக முதல்வர் கூறுவது போலவே தற்போதைய பள்ளிக் கல்வித்துறையும் நேர்மையாகச் செயல்பட்டு வருகிறது. கடந்த ஆட்சிக் காலத்தில் ஆசிரியர்களுக்கான நிர்வாக மாறுதல் (Transfer) என்பது பெரிய வியாபாரமாக இருந்தது. ஆனால் தற்போதைய ஆட்சியில் அந்த நிலை மாறி வெளிப்படைத் தன்மை நிலவுகிறது எனக் கூறினார். இந்நிகழ்ச்சியில் ஆசிரியர்கூட்டமைப்பின் மாநில, மாவட்ட நிர்வாகிகள் மற்றும் ஆசிரியர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

# தென் தாமரைகுளம் புனித பனிமய அன்னை ஆலய திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது



தென்தாமரைகுளம், ஜூலை. .29

தென்தாமரைகுளம் புனித பனிமய அன்னைஆலய திருவிழா நேற்று முன்தினம் (திங்கள்கிழமை) கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழா. அடுத்த மாதம் 5ந் தேதி வரை10நாட்கள்தொடர்ந்து நடக்கிறது. முதல் நாளான நேற்று முன்தினம் திங்கள்கிழமை மாலை 6 மணிக்கு செபமாலை, புகழ்மாலை, 6.45மணிக்கு திருக்கொடி ஏற்றம், திருப்பலிநடைபெற்றது, இதற்கு கன்னியாகுமரி மறை வட்ட முதல்வர் அருள் பணி பெலிக்ஸ் அலெக்சாண்டர் தலைமை தாங்கினார்.கன்னியாகுமரி பங்குத் தந்தை அருள்பணி மைக்கல் ஏஞ்சல் மறையுரை ஆற்றினார்.இரவு 8.30 மனிக்கு இன்னிசை கச்சேரி நடைபெற்றது. .

9ம் நாளான ஆகஸ்ட் 4ந் தேதி செவ்வாய்கிழமை மாலை 6 மணிக்கு செபமாலை, புகழ்மாலையும், 6:45 மணிக்கு சிறப்பு மாலை ஆராதனையும் நடைபெறுகிறது.இதற்கு கோட்டாறு மறை மாவட்டச் செயலர் அருள்பணி. மரிய கிளாட்சன் தலைமை தாங்குகிறார், திருச்சி தமிழக இளையோர் பணிக்குழு இயக்குனர் அருள் பணி. ஜெனிபர் எடிசன் மறையுரையாற்றுகிறார். உடன் மண்ணின் மைந்தர்கள் மற்றும் அருள் சகோதரிகள் ஜெபிக்கின்றனர்,இரவு 8.30 மணிக்கு அதிசய பனிமய அன்னையின் அலங்கார தேர்பவனி நடைபெறுகிறது.

10ம் நாளான 5ந் தேதி புதன் கிழமை காலை 7.30 மணிக்கு செபமாலை புகழ்மாலை,8 மணிக்கு திருவிழா திருப்பலி நடைபெறுகிறது. இதற்கு சென்னை, நம் வாழ்வு முதன்மை ஆசிரியர் அருள் முனைவர். ராஜசேகரன் தலைமை தாங்குகிறார். பெங்களூர் சட்டப்பணி குழு செயலர் அருள் முனைவர் கிறிஸ்து ராஜமணி மறையுரையாற்றுகிறார். பிற்பகல் 3மணிக்கு அதிசய பனிமய அன்னையின் அலங்கார தேர்பவனி நடைபெறுகிறது. மாலை 6.30 மணிக்கு திருக்கொடியிறக்கம், நற்கருணை ஆசீர், இரவு 7. 30 மணிக்கு பங்கு மக்கள் வழங்கும் இன்னிசை விருந்து நடைபெறுகிறது. விழா ஏற்பாடுகளை பங்கு தந்தை எல். எட்வர்ட் மற்றும் பங்குமக்கள், பங்கு அருள்பணிப் பேரவையினர். அருள்சகோதரிகள் செய்துவருகின்றனர்.

# கோவையில் இந்திய மருத்துவச்சங்கம் சார்பில் மருத்துவர்கள் தின விழா




கோவை ஜூலை:29

இந்திய மருத்துவச் சங்கத்தின் கோவை கிளை சார்பில் மருத்துவர்கள் தின விழா கோவை ஐ.எம்.ஏ அரங்கில் நடைபெற்றது. விழாவிற்கு இந்திய மருத்துவச் சங்க கோவை கிளையின் தலைவர் டாக்டர் பி. கோஷல் ராம் தலைமை தாங்கி வரவேற்புரையாற்றினார்.கவுரவச் செயலாளர் டாக்டர் டி.பரமேஸ்வரன் ஆண்டறிக்கை வாசித்தார்.

விழாவில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் வி.சம்பத்குமார் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். மேலும் சிறப்பு அழைப்பாளர்களாக, ஐ.எம்.ஏ தமிழ்நாடு தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் டாக்டர் ஏ.கே. ரவிகுமார் மேற்கு மண்டலதுணைத் தலைவர் டாக்டர் சி.பி சண்முகசுந்தரம்,முன்னாள் மாநிலச் செயலாளர் டாக்டர் எஸ்.கார்த்திக் பிரபு ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

இவ்விழாவின் முக்கிய நிகழ்வாக மருத்துவர்களின் சேவையை பாராட்டும் வகையில் விருதுகள் வழங்கும் விழா நடைபெற்றது.

அமைச்சர்சம்பத்குமார் 56 மருத்துவர்களுக்கு விருதுகளை வழங்கி கவுரவித்தார்.விழா நிறைவில் நிதிச் செயலாளர் டாக்டர் ஆர்.பாலமுருகன் நன்றியுரை ஆற்றினார்.

# சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை நினைவு நாள் மற்றும் ஆடி 18 ஆடிப்பெருக்கு விழா

சேலம் ஜூலை 29

சேலம் மாவட்டம் சங்ககிரி வட்டத்தை சேர்ந்த சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு ஆடி 18 நாளான 03.08. 2026 திங்கட்கிழமை அன்று சேலம் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள் மற்றும் பள்ளி கல்லூரிகளுக்கு உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி உள்ளூர் விடுமுறை செலாவணி முறி சட்டம் 1881 ன் கீழ் வராது என்பதால் அரசின் பாதுகாப்புக்கான மற்றும் அவசர அலுவல்களை கவனிக்கும் பொருட்டு அன்று மாவட்டத்தில் உள்ள மாவட்ட கருவூலம் மற்றும் சார்நிலைக் கருவூலங்கள் குறிப்பிட்ட பணியாளர்களோடு இயங்கும். இந்த உள்ளூர் விடுமுறைக்கு பதிலாக சேலம் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள் மற்றும் பள்ளி கல்லூரிகளுக்கு பின்வரும் 22.8.20 26 சனிக்கிழமை அன்று பணி நாளாக அறிவிக்கப்படுகிறது.

இவ்வாறு சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் இளம் பகவத் கூறினார்.




## பாலக்கோடு பேருந்து நிலையம் முன்பு

# முன்னாள் குடியரசு தலைவர் டாக்டர் அப்துல் கலாம் 11ம் ஆண்டு நினைவு அஞ்சலி

தருமபுரி ஜூலை 29

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு பஸ் ஸ்டாண்ட் முன்பு முன்னாள் குடியரசு தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே அப்துல் கலாம் 11ம் ஆண்டு நினைவு அஞ்சலி டாக்டர் கலாம் பசுமை நல அறக்கட்டளை சார்பில் தலைவர் முருகன் தலைமையில் நடைபெற்றது. முன்னாள் ராணுவ வீரர் சங்க தலைவர் கிருஷ்ணன் பொன்னுசாமி, அரிமா சங்க நிர்வாகிகள் தர்மன், ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் பஸ் ஸ்டாண்ட் முன்பு அமைக்கப்பட்டுள்ள டாக்டர் அப்துல் கலாமின் திரு உருவ படத்திற்கு மாலை அணிவித்து, மலர்தூவி அஞ்சலி செலுத்தினர். இந்நிகழ்சியில் டாக்டர் கலாம் பசுமை நல அறக்கட்டளை நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## விளாத்திகுளத்தில்

# 4 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த பேக்கரி உரிமையாளர் கைது



விளாத்திகுளம் ஜூலை 29.

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி பேருந்து நிலையம் பகுதியைச் சேர்ந்த சிதம்பரம் என்பவரின் மகன் குமார் (54), இவர் தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் சுப்பிரமணியபுரத்தில் கடந்த சில ஆண்டுகளாக ஐயங்கார் பேக்கரி நடத்தி வந்துள்ளார். பேக்கரி நடத்துவதற்காக அதே பகுதியில் வாடகைக்கு வீடு எடுத்து வசித்து வந்துள்ளார், இந்நிலையில் வீட்டு அருகே விளையாடிக் கொண்டிருந்த நான்கு வயது சிறுமியை வீட்டுக்குள் அழைத்து பாலியல் துன்புறுத்தி வந்துள்ளார், இதனை அடுத்து சிறுமியின் தாய் இதைப்பார்த்தவுடன் முதியவர் குமாரை விளக்கமாத்தால் அடித்து விளாத்திகுளம் அனைத்து மகளிர் காவல் நிலையத்துக்கு தகவல் தெரிவித்துள்ளார். இதனை அடுத்து விளாத்திகுளம் அனைத்து மகளிர் காவல் நிலைய போலீசார் குமாரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்.

# சாலையில் கிடந்த மின்கம்பி... பலரின் உயிரைக் காப்பாற்றிய மூதாட்டி.!

புதுக்கோட்டை மாவட்டம் கீரமங்கலம் பகுதியில் 27ம் தேதிமாலை மழை பெய்தது. மழை பெய்த நேரத்தில் தர்மர் கோயில் தெரு வழியாகக் கடைவீதிக்குச் செல்லும் சாலையில் உள்ள மரம் உடைந்து மின்கம்பிகளில் விழுந்தது. இதனால் மின்கம்பியில் தொய்வு ஏற்பட்டு சாலையில் கிடந்தது. அதோடு அந்த கம்பியில் மின்சாரம் வந்ததால் மின் விளக்குகள் எரிந்தது. இதனைப் பார்த்த அந்தப் பகுதியில் உள்ள ஒரு மூதாட்டி அந்த வழியாக ஏராளமானோர் செல்வார்கள் அதனால் ஆபத்து ஏற்படும் என்பதை உணர்ந்து மழைக்கு குடையைப் பிடித்துக் கொண்டு சாலையில் நின்று இரு பக்கமிருந்தும் வந்தவர்களை நிறுத்தி மின்கம்பி கிடக்கிறது கிட்டே (அருகே) போக வேண்டாம் என்று பல பேரின் உயிர்களைக் காப்பாற்றிக் கொண்டிருந்தார். அதே போல அந்த வழியாகச் சென்ற கொத்தமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த முருகதாஜையும் அந்த மூதாட்டி நிறுத்தி மின் கம்பி கீழே கிடக்கிறது ஆனால்மின்சாரம்துண்டிக்கப்படவில்லைஎன்றுசொல்ல உடனே முருகதாஜ் கீரமங்கலம் மின்வாரிய அலுவலகத்திற்குத் தகவல் கூறியுள்ளார். அதன் பின்னர் சிறிது நேரத்தில் மின் வாரிய ஊழியர்கள் வந்து மின் இணைப்பைத் துண்டித்து மின் கம்பியைச் சரி செய்தனர். சாலையில் மின் விழுந்து கிடந்த நேரத்தில் யாரும் ஆபத்தில் சிக்கிவிடக் கூடாது என்று கம்பியைச் சரி செய்யும் வரை மழையில் குடைபிடித்துக் கொண்டு சாலையில் நின்று அந்த வழியாக வந்தவர்களை நிறுத்தி பலரது உயிர்களைக் காப்பாற்றிய மூதாட்டியை மனதார பாராட்டலாம்எனபலரும்கருத்துதெரிவித்துவருகின்றனர்.

# விடுதலை வேங்கைகள் கட்சி சார்பில் ஈரோட்டில் கண்டன ஆர்ப்பாட்டம்




ஈரோடு ஜூலை 29

ஈரோடு கருங்கல்பாளையம் காந்தி சிலை அருகில் சமூக நீதிப் போராளி அய்யா ஹெச்.எம். ஜெகநாதன் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு, விடுதலை வேங்கைகள் கட்சி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது

நிகழ்ச்சிக்கு விடுதலை வேங்கைகள் கட்சியின் தலைவர் தமிழின்பன் தலைமை தாங்கி கண்டன உரையாற்றினார்.

மாநில பொருளாளர் சௌந்தரராஜன் மற்றும் மாநகரதலைவர்வேங்கை நடராசு ஆகியோர் முன்னிலை வகித்தனர். திராவிடர் கழக மேற்கு மண்டல செயலாளர் சண்முகம் தொடக்க உரையாற்றினார்.

ஜனநாயக மக்கள் கழக தலைவர் ஏ.சி. கண்ணன் மற்றும் ஜெய்பீம் மக்கள் கட்சி தலைவர் அறிவழகன் ஆகியோர் கருத்துரையாற்றினர்

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஏழை எளிய மாணவர்களின் மருத்துவக் கனவைச் சிதைக்கின்ற நீட் தேர்வை நிரந்தரமாக ரத்து செய்ய வேண்டும், நீட் முறைகேட்டில் ஈடுபட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும், மேகதாது அணை கட்டுவதைத்தடைசெய்ய வேண்டும் மற்றும் டெல்டா விவசாயத்திற்கு உடனடியாக நீரைத் திறந்து விட வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

மேலும், பிற்படுத்தப்பட்டோர், ஒடுக்கப்பட்டோர் மற்றும் பட்டியலின மக்களுக்கு எதிராகச் செயல்படுவதாகக் கூறி இந்திய பிரதமர் பதவி விலக வேண்டும் என்றும், இசுலாமிய கிருத்துவர்களைத் தாய் மதம் திரும்புமாறு வற்புறுத்துவதோடு இசுலாமியர் மற்றும் பட்டியலின மக்கள் நடத்தும் மாட்டிறைச்சி வியாபாரத்தை முடக்கத் துடிக்கும் இந்து பாதுகாப்பு படையின் தேசியத் தலைவரைக் கண்டித்தும் முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

இந்நிகழ்வில் ஈரோடு தெற்கு மாவட்ட தலைவர் வேங்கை வீரமுத்து, திருப்பூர் மாவட்ட செயலாளர் மகேந்திரன், நாமக்கல் மாவட்ட நிர்வாகி சக்திவேல் உள்ளிட்ட கட்சியின் முக்கிய நிர்வாகிகளும்நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்களும் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் இயல்பு தணிக்கை குறித்து மாவட்ட ஆட்சியர் .ச.கந்தசாமி நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

# கஞ்சா விற்பனை செய்த இலங்கை மறுவாழ்வு மையத்தைச் சேர்ந்த இரு நபர்கள் கைது



திருச்சி மாவட்டம் துவாக்குடி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட இலங்கை மறுவாழ்வு மையத்தைச் சேர்ந்த பிரசோத் மற்றும் அமீர் ஆகிய இருவரும் துவாக்குடி வாழவந்தான் கோட்டை இலங்கை மறுவாழ்வு மையம் பின்புறம் உள்ள காட்டினுள் தமிழக அரசு தடை செய்யப்பட்ட கஞ்சா என்னும் போதை பொருளை விற்பனை செய்ய வைத்திருந்த போது இருவரையும் திருவரம்பூர் உட்கோட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களது தனிப்படையினர் பிடித்து துவாக்குடி காவல் நிலையத்தில் ஒப்படைக்க அவர்கள் மீது கஞ்சா என்னும் பொருளை விற்பனைக்கு வைத்திருந்த குற்றத்திற்காக வழக்கு பதிவு செய்யப்பட்டு அவர்களிடம் இருந்து 50 கிராம் கஞ்சா எனும் மனம்மயக்கும் போதை பொருள் கைப்பற்றப்பட்டு இருவரையும் எச்சரிக்கை செய்து ஜாமினில் விடப்பட்டனர்.

## மண்டைக்காடு பகவதி அம்மன் திருக்கோவில் நிர்வாக சீர்கேடுகளைக்கண்டித்து

# ஆகஸ்ட் 4ல் விசுவ ஹிந்து பரிஷத் தொடர் தர்ணா போராட்டம்

நாகர்கோவில், ஜூலை.29

கன்னியாகுமரி மாவட்டத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க மற்றும் "பெண்களின் சபரிமலை" என்று பக்தர்களால் போற்றப்படும் மண்டைக்காடு பகவதி அம்மன் திருக்கோவிலில், கடந்த 5 ஆண்டுகளாகப் பல்வேறு நிர்வாக சீர்கேடுகளும், நிதி முறைகேடுகளும் தொடர்ந்து நடைபெற்று வருவதாகப் பக்தர்கள் தரப்பில் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

திருக்கோவில் ஆகம விதிகளுக்கு எதிராகவும், ஆலயத்தின் புனிதத்தைக் கெடுக்கும் வகையிலும் அங்குள்ள பொறுப்பு அதிகாரிகளால் தொடர்ந்து பல்வேறு சட்டவிரோதச் செயல்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பாகச் சுசீந்திரம் இணை ஆணையர் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருக்குப் பல்வேறு முறை மனுக்கள் அளிக்கப்பட்ட போதிலும், அறநிலையத் துறை எவ்விதத் துறைசார் நடவடிக்கையும் எடுக்காமல் மௌனம் காத்து வருகிறது.

தொடர் ஊழல் மற்றும் முறைகேடு புகார்கள் அளிக்கப்பட்ட நிலையிலும், எந்தவித விசாரணையும் இன்றி வாய்மூடி கைகட்டி நிற்கும் இந்து சமய அறநிலையத் துறையின் கண்டிப்பான மெத்தனப்போக்கைக் கண்டித்தும், உடனடி நடவடிக்கைஎடுக்கவலியுறுத்தி குமரி மாவட்ட விசுவ ஹிந்து பரிஷத் சார்பில் மாபெரும் கண்டனத் தர்ணா போராட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

வரும் ஆகஸ்ட் 04. ம் தேதி செவ்வாய்க்கிழமை காலை 10:30 மணிக்கு மண்டைக்காடு திருக்கோவில் ஸ்ரீகாரியம் அலுவலகம் எதிரே இந்த போராட்டம் நடக்கிறது.

முக்கிய கோரிக்கைகளாக திருக்கோவில் நிர்வாகச் சீர்கேடுகள் மற்றும் முறைகேடுகளில் தொடர்புடைய பொறுப்பு அதிகாரிகளை உடனடியாகத் தற்காலிகப் பணிநீக்கம் செய்ய வேண்டும்.

திருக்கோவிலின் கடந்த காலக்கணக்குகள் மற்றும் நிர்வாக நடைமுறைகள் குறித்து விரிவான உள் தணிக்கை செய்ய உத்தரவிட வேண்டும். ஆகம விதிகளையும் திருக்கோவில் புனிதத்தையும் பாதுகாக்கும் வகையில் வெளிப்படைத்தன்மையான நிர்வாகத்தைச் செயல்படுத்த வேண்டும். என கோரிக்கைகள் முன்வைத்து போராட்டம் நடக்கிறது.

பொதுமக்களுக்கும், திருக்கோவிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கும், போக்குவரத்துக்கும் எவ்வித இடையூறும் இன்றி, சட்டத்திற்குட்பட்டு அமைதியான முறையில் இப்போராட்டம் நடைபெறவுள்ளது. இதில் பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளாகக் கலந்து கொள்ளுமாறு விஷ்வ இந்து பரிஷத் சார்பில் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

# காவல்துறை சார்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சி



திருப்பத்தூர் மாவட்ட காவல்துறையின் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு (SJHR) சார்பில், வாணியம்பாடி எஸ்.எஃப்.எஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில் சிறப்பு உதவி ஆய்வாளர் ரூபி தலைமையில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில்சுமார்1,100மாணவ,மாணவிகள்பங்கேற்றனர். நிகழ்ச்சியில் போக்சோ சட்டம், காவல் உதவி செயலியின் பயன்பாடு, சாலைப் பாதுகாப்பு, பாதுகாப்பான வாகன ஓட்டம், தலைக்கவசம் அணிவதன் அவசியம் மற்றும் போக்குவரத்து விதிகளை கடைபிடிப்பதன் முக்கியத்துவம் குறித்து மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.



# திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் அவல நிலை

திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நோயாளியுடன் வரும் துணையாளரே வீல் சேர் தள்ளிக் கொண்டு போகணும் கேட்டா ஆள் இல்லைன்னு சொல்றாங்க இது வாடிக்கையான வேலையானது திருவள்ளூர் மாவட்டத்திற்கு இது தலைமை மருத்துவமனை ஆகும் இங்கு ஒரு நாளைக்கு 1000க்கும் மேற்பட்ட உள் நோயாளிகளும் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட உள்நோயாளிகளும் வந்து செல்கின்றன இந்நிலையில் மருத்துவமனையில் போதுமான வசதிகள் இல்லாததால் நோயாளிகள் மற்றும் அவளுடன் வரும் துணையாளர்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகின்றன அடித்தளத்தில் வெளி நோயாளி சீட்டு பெற்று நோய் ஏற்ப ஏற்ப ஐந்து மாடி உயரத்துக்கு சென்று மருத்துவரை பார்க்க வேண்டும் இந்நிலையில் அறுவை சிகிச்சை செய்தவர்கள் நடக்க முடியாத நிலையில் வரு வருபவர்கள் அவர்களுக்கு வீல் சேர் மூலம் மருத்துவ இடம் கொண்டு போக மருத்துவ உதவியாளரையே இல்லை இதனால் நோயாளியுடன் வந்த துணையாளரே அந்த வீல் சேரை தள்ளிக் கொண்டு போவதால் நோயாளியை எங்கு கவிழ்த்து விடுவார் என்ற அச்சுத்துடன் அந்த வீல் சேரில் அமர வைத்து தள்ளிக் கொண்டு போவது பொது மக்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது அன்பு கொள்ளுமா அரசு? சமூக ஆர்வலர்கள் கோரிக்கை



# தஞ்சாவூரில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

## நலத்திட்ட உதவிகள் கலெக்டர் ரேவதி வழங்கினார்

தஞ்சாவூர் ஜூலை 29 தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் ரேவதி தலைமையில் நடைபெற்றது

கூட்டத்தில் இலவச வீட்டு மனை பட்டா வ, முதியோர் உதவித் தொகை, குடும்ப அட்டை, பட்டாமாற்றம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 603 மனுக்களை பொது மக்கள் கலெக்டரிடம் வழங்கினார் கள் .

இந்த மனுக்கள் மீது உரிய நடவடிக்கைகள் உடனடியாக மேற் கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு கலெக்டர் உத்தரவிட்டார்

அதனைத் தொடர்ந்து முதலமை ச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டத்தின் கீழ் 17 பேருக்கு ரூபாய் 29 லட்சத்து 75 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு கலெக்டர் வழங்கினார்

மேலும் டாக்டரின் பரிந்துரையின் பெயரில் ஆக்ஸிஜன் கேட்டு விண் ணப்பித்த திருவேங்கடம் என்பவரு க்கு உடனடியாக தீர்வாக ஆக்ஸி ஜன் செறிவூட்டியினை அவரது மகன் மணிகண்டன் என்பவரிடம் கலெக்டர் ரேவதி வழங்கினார்

இந்தக் கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் தியாகராஜன், சமூக பாதுகாப்புத் திட்ட சப்க லெக் டர் சவுமியா மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்

# வாரியூர் அரசு மேல்நிலை பள்ளி தூதுவராக கவுன்சிலர் வீடியோ குமார் தேர்வு



கன்னியாகுமரி ஜூலை 28

அஞ்சுகிராமம் பேரூராட்சிக்குட்ட வாரியூர் அரசு மேல்நிலை பள்ளி தூதுவராக அப்பள்ளியின் முன்னாள் மாணவரும், கவுன்சிலருமான வீடி யோகுமார் தேர்வு செய்யப்பட்டார்.

அவருக்கு தலைமை ஆசிரியர்பிஸ்மிபி.றேனி, சான்றிதழை வழங்கினார். அவரை பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழகத்த லைவர் மேட்டுக்குடி முருகன், செயலாளர் வாரியூர் மணிகண்டன் ஆகியோர் வாழ்த்தினர்.

# சேலத்தில் அரசு பொருட்காட்சி



சேலம் ஜூலை 29

சேலம் பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள போஸ் மைதானத்தில் அரசு பொருட்காட்சி 2026 ஆகஸ்ட் முதல் வாரம் தொடங்கி 45 நாட்கள் நடைபெற உள்ளது. அதனை ஒட்டி முன்னேற்பாடு பணிகள் குறித்து அனைத்து துறை அரசு அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. சேலம் போஸ் மைதானத்தில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் நடத்தப்பட உள்ள அரசு பொருட்காட்சியில் தமிழ்நாடு அரசின் திட்டங்களை பொதுமக்கள் அறிந்து மேலும் பயன்பெறும் வகையில் சேலம் மாநகராட்சி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, போக்குவரத்து துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை, வருவாய் துறை, செய்தி மக்கள் தொடர்பு துறை, வேளாண்மை உழவர் நலத் துறை, காவல்துறை கூட்டுறவு துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, பள்ளி கல்வித்துறை, சமூக நலன் மகளிர் உரிமை துறை, குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, வனத்துறை, கால் நடை பராமரிப்புத்துறை, தோட்டக்கலைத்துறை, மற்றும் மலைப் பயிர்கள் துறை, பொதுப்பணித் துறை, இந்து சமய அறநிலையத்துறை, தொழில் துறை, நெடுஞ்சாலை துறை, மாற்று திறனாளிகள் நலத்துறை, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு துறை, பிற்படுத்த ப்பட்டோர் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, சுற்றுலாத்துறை, மீன்வளத் துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு துறை, ஆவின் நிறுவனம், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் பேரூராட்சிகள் துறை, என மொத்தம் 32 துறைகளின் சார்பில் கண்காட்சி அரங்குகள் அமைக்கப்படவுள்ளது. மேலும் இந்த அரசு பொருட்காட்சியில் பொழுதுபோக்கு அம்சங்களும் வீட்டுஉபயோகப்பொருட்கள் மற்றும் பல்வேறு விற்பனை அரங்குகளும் அமைக்கப்பட உள்ளது. அரசு பொருட்காட்சி நடைபெறும் நாட்களில் காவல் துறையினர் மூலம் உரிய பாதுகாப்பு வசதி மேற் கொள்ளப்படும். மருத்துவம் மற்றும் மக்கள் நல் வாழ்வுத் துறையின் மூலம் பொருட்காட்சி மைதானத்தில் முதலுதவி மற்றும் அவசர மருத்துவ சிகிச்சை செய்வதற்காக ஒரு மருத்துவர் தலைமையிலான குழு அமைக்கப்பட அறிவுறுத்தப்பட்டுள்ளது. தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறையினர் தீயணைப்பு வண்டியை உரிய அலுவலர்களுடன் பொருட்காட்சி மைதானத்தில் அனைத்து நாட்களிலும் தயார் நிலையில் நிறுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. சேலம் மாநகராட்சி சார்பில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் மற்றும் சுகாதார வசதிகள் மேற் கொள்ள ஏற்பாடு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. குறிப்பாகஅனைத்துதரப்பு மக்களும் தமிழ்நாடு அரசின் திட்டங்களை மென் மேலும் அறிந்து பயன்பெறும் வகையில் அனைத்து துறை அரசு அலுவலர்களும் தங்கள் துறையின் பொருட்காட்சி அரங்குகளை சிறப்பான முறையில் அமைத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது இவ்வாறு சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் இளம் பகவத் தெரிவித்தார்.

# சி.டி.எம். புரம் இவான்ஸ் ஸ்கூல் ஆப் எக்ஸலன்ஸ் பள்ளியில் மாணவர் குழுத்தலைவர் கௌரவ விழா



சுசீந்திரம்.ஜீலை29

நாகர்கோவில் அருகே சி.டி.எம்.புரத்தில் அமைந்துள்ள இவான்ஸ் ஸ்கூல் ஆப் எக்ஸலன்ஸ் பள்ளியில் மாணவர் குழுத்தலைவர் "கௌரவ விழா" சிறப்பாக கொண்டாடப்பட்டது. இவ்விழாவிற்கு பள்ளியின் தாளாளர் டாக்டர் வி. பி.மணி மற்றும் நிர்வாக இயக்குனர் வழக்கறிஞர் பி. வெல்பின் ஆகியோர் தலைமை தாங்கினர். சிறப்பு விருந்தினராக என்.ஜி.ஓ.காலனி இவான்ஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியின் முதல்வர் ஜோஸ்லின் ஞான கிறிஸ்டி மணி கலந்து கொண்டார். பள்ளியின் முதல்வர் தி.தன சுஜி முன்னிலை வகித்தார். விழாவில் பள்ளியின் தலைமை மாணவ மாணவிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து விளையாட்டு குழுக்கள் மற்றும் குழுக்கள் வாரியாக தலைமை மாணவ மாணவிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். நிகழ்ச்சியில் பள்ளியின் துணை முதல்வர்கள் கண்ணன், செல்வி ஜோசப், ஆசிரிய, ஆசிரியைகள் மாணவ மாணவிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



தருமபுரி ஜூலை 29

தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள அதியன் கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாட்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் சரவணன் தலைமையில் நடைபெற்றது இந்த கூட்டத்தில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல துறையின் சார்பில் மாற்று திறனாளிகளுக்கு காண உபகரணங்களை ஆட்சியர் வழங்கினார். மேலும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தருமபுரி பிரிவு விளையாட்டு விடுதி மாணவிகள் மதுரையில் நடைபெற்றமாநிலஅளவிலான வாலிபால் போட்டியில் கலந்து கொண்டு வெள்ளிப் பதக்கத்தை வென்ற விளையாட்டு மாணவிகள் மாவட்ட ஆட்சியரிடம் நேரில் சென்று காண்பித்து வாழ்த்து பெற்றனர். தமிழ் வளர்ச்சி துறையின் சார்பில் மாவட்ட அளவிலான கட்டுரை போட்டி, பேச்சுப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசு தொகை மற்றும் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித் தலைவர் வழங்கினார். இதில் மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகாமை திட்ட இயக்குனர் மதுமதி, மாற்றுத்திறனாளிகள் நலத் துறை அலுவலர் சரவணன் மற்றும் அரசு துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

## தேனி மாவட்டத்தில் தமிழ்நாடுநாள் விழாவினை கொண்டாடும் வகையில்

# பள்ளி மாணவர்களுக்கு நடத்தப்பட்டப் கட்டுரைப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுத்தொகை,பாராட்டுச் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்



தேனி மாவட்டத்தில் தமிழ்நாடுநாள் விழாவினை கொண்டாடும் வகையில் தமிழ்வளர்ச்சித் துறையின் சார்பில் பள்ளி மாணவர்களுக்கு நடத்தப்பட்டப் பேச்சுப்போட்டி மற்றும் கட்டுரைப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு, மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் (28.07.2026) பரிசுத்தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன் இ.ஆ.ப., வழங்கினார். தமிழ்நாடுநாள் விழாவினை முன்னிட்டு, மாவட்ட அளவில் பள்ளி மாணவர்களுக்கு நடத்தப்பட்டப் பேச்சுப்போட்டி மற்றும் கட்டுரைப் போட்டியில் முதல் மூன்று இடங்களில் வெற்றிபெற்றவர்களுக்கு ரொக்கப்பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கும் வகையில், பேச்சுப்போட்டியில் முதலிடம் பெற்ற தேவாரம் இந்து நாடார் உறவின் முறை பதின்ம மேல்நிலைப்பள்ளியில் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவி மா.யாசினி, இரண்டாமிடம் பெற்ற பெரியகுளம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 11ஆம் வகுப்பு பயிலும் மாணவி ரா.ஜெசிந்தா,மூன்றாமிடம் பெற்ற அல்லிநகரம் அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவி நா.அஸ்வினி மற்றும் கட்டுரைப் போட்டியில் முதலிடம் பெற்ற முத்துதேவன்பட்டியில் உள்ள தேனி மேலப்பேட்டை இந்து நாடார் உறவின்முறை பதின்ம மேல்நிலைப்பள்ளியில் 11ஆம் வகுப்பு பயிலும் ர.பா.தனுஸ்ரீ, இரண்டாமிடம் பெற்ற இராயப்பன்பட்டி சவரிமுத்து உடையார் நினைவு மேல்நிலைப்பள்ளியில் 11 ஆம் வகுப்பு பயிலும் மாணவி சு.அதினா, மூன்றாமிடம் பெற்ற கம்பம் நகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 9ஆம் வகுப்பு பயிலும் மாணவி மு.ஆஃபினாரம்ஜியா ஆகியோருக்கு முதல் பரிசாக ரூ.10,000/, இரண்டாம் பரிசாக ரூ.7,000/ மூன்றாம் பரிசாக ரூ.5,000/க்கான ரொக்கத்தொகை மற்றும் பாராட்டுச்சான்றிதழினை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கி, மென்மேலும் பல வெற்றிகள் பெற மாணவிகளுக்கு வாழ்த்துகளை தெரிவித்தார். இந்நிகழ்வில் தமிழ்வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் பாப்பா லெட்சுமி உட்பட அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

# ஈரோட்டில் அரசு நிலம் வழங்கக் கோரி மாவட்ட ஆட்சியரிடம் மனு



ஈரோடு, ஜூலை 29:

ஈரோடு மாவட்டத்தில் நிலமற்ற பட்டியல் இன மக்களுக்கு அரசு நிலங்களை ஒதுக்கி பட்டா வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரி தலித் விடுதலை இயக்கம் சார்பில் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்கப்பட்டது.

அந்த மனுவில் கூறியிருப்பதாவது: ஈரோடு மாவட்டம் அந்தியூர் வட்டம் மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் சுமார் 250 பட்டியல் இன குடும்பங்கள் பல ஆண்டுகளாக நிலமின்றி வசித்து வருகின்றன. இக்குடும்பங்களுக்கு வாழ்வாதாரத்திற்கும் குடியிருப்பிற்கும் தேவையான நிலம் வழங்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டு ள்ளது. மேலும், சருகு, கோபி, அந்தியூர் உள்ளிட்ட பகுதிகளில் அரசுக்குச் சொந்தமான காலி நிலங்கள் இருப்பதாகவும், அவற்றை நிலமற்ற பட்டியல் இன மக்களுக்கு ஒதுக்கி பட்டா வழங்க வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது. இதற்காக கடந்த காலங்களில் பல முறை அரசிடம் மனுக்கள் அளிக்கப்பட்டிருந்தும் இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கடந்த 25.06.2026 அன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், நிலமற்ற பட்டியல் இன மக்களுக்கு நிலம் வழங்குவது தொடர்பாக அதிகாரிகள் பரிசீலனை மேற்கொண்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. நிலமற்ற குடும்பங்களின் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு, அரசு கையிருப்பு நிலங்கள் அல்லது அரசு கட்டுப்பாட்டில் உள்ள நிலங்களை அடையாளம் கண்டு, உரிய பட்டா வழங்க மாவட்ட நிர்வாகம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என தலித் விடுதலை இயக்கம் வலியுறுத்தியுள்ளது.



கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி பவர்கிரீடு கூட்டரங்கில், கெலவரப்பள்ளி அணையின் இடதுபுறக் கால்வாயிலிருந்து வேப்பனப்பள்ளி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சின்னாறு கிழக்கு உபவடி நிலத்தில் உள்ள வறண்ட சுமார் 30 ஏரிகளுக்கு புதிய வழங்கு கால்வாய் அமைத்து நீர் கொண்டு செல்வதுகுறித்துமாவட்டஆட்சித்தலைவர்.ச.தினேஷ்குமார்வேப்பனப்பள்ளிசட்டமன்றஉறுப்பினர் .பி.எஸ்.சீனிவாசன் ஆலோசனை மேற்கொண்டனர். உடன், நீர்வளத்துறை செயற்பொறியாளர்கள் . செந்தில் குமார், .எஸ்.அருள்குமரன்.திட்டங்கள் திட்டமிடுதல்.ம. வடிவமைப்பு கோட்டம் சேலம். உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# நல்லம்பள்ளி கிழக்கு ஒன்றிய அதிமுக நிர்வாகிகள் கூட்டம்



தருமபுரி ஜூலை 29

தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி கிழக்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட வெங்கட்டம்பட்டி, பூதனஅள்ளி, நல்லம்பள்ளி உள்ளிட்ட பல்வேறு ஊராட்சிகளில் அதிமுக நிர்வாகிகளை புதியதாக பொறுப்பேற்ற தருமபுரி அதிமுக கிழக்கு மாவட்ட செயலாளர் மருத்துவர் அசோகன் நேரில் சந்தித்து அவர்களுக்கு சால்வை அணிவித்து வாழ்த்துக்களை பெற்றார். பின்னர் பேசிய அவர் தமிழகத்தில் ஊழலை ஒழிப்பேன் என்று கூறி ஆட்சிக்கு வந்தவர் தற்போது படத்தின் டிக்கெட் 200 ரூபாயிலிருந்து 2 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்கின்றனர். தன் படத்தின் டிக்கெட் ஊழலை ஒழிக்காதவர் தமிழகத்தில் எப்படி ஊழலை ஒழிப்பார் என பேசினார். அதிமுகவில் தொண்டர்கள் தான் வேர்கள் எம்ஜிஆர், அம்மாவின் கரத்தை வலுப்படுத்தியது போல் கழக பொதுச்செயலாளர் எடப்பாடியார் கரத்தையும் வலுப்பெற அனைவரும் பாடுபட வேண்டும் என நிர்வாகிகளை கேட்டுக்கொண்டார். இந்நிகழ்வில் நல்லம்பள்ளி கிழக்கு ஒன்றிய செயலாளர் சிவபிரகாசம், தருமபுரி நகர செயலாளர் பூக்கடை ரவி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# மார்த்தாண்டம் தனியார் கண் ஆஸ்பத்திரி மாடியில் இருந்து நர்ஸ் விழுந்து உயிரிழப்பு! தற்கொலையா? போலீசார் விசாரணை!!



மார்த்தாண்டம், ஜூலை.29

அருமனை அருகே உள்ள ஆற்றூர் கல்லுபாலம் பகுதியை சேர்ந்தவர் ஜஸ்டின் ராஜ் என்பவரது மகள் ஆஷிகா (22). இவர் மார்த்தாண்டம் வெட்டுவந்நி பகுதியில் உள்ள தனியார் கண் மருத்துவமனை ஒன்றில் நர்சாக வேலை பார்த்து வந்தார். இந்த நிலையில் நேற்று முன்தினம் காலை சுமார் 8 மணி அளவில் வீட்டில் இருந்து வேலைக்கு சென்றார். இரவு பணியை முடித்துவிட்டு ஆஸ்பத்திரியிலேயே தங்கியுள்ளார். இரவு சுமார் 11 மணியளவில் மருத்துவமனையில் 3 வது மாடியில் நின்று கொண்டு போன் பேசியதாக கூறப்படுகிறது. அப்போது மாடியில் இருந்து ஆஷிகா கீழே விழுந்துள்ளார்.

அவரது அலறும் சத்தம் கேட்டு அங்கு சென்ற சகப் பணியாளர்கள் உடனடியாக அவரை மீட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் குழித்துறை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். அங்கு அவரை பரிசோதித்த டாக்டர்கள் ஆஷிகா ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர்.

இந்த தகவல் கிடைத்ததும் மார்த்தாண்டம் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விசாரித்தனர். அதை தொடர்ந்து நர்ஸ் உடலை குமரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு பரிசோதனைக்குஅனுப்பி வைத்தனர்.

போலீசார் முதற்கட்ட விசாரணையில் ஆஷிகாவுக்கு கடந்த 7ம் தேதி ஒரு வாலிபருடன் திருமண நிச்சயதார்த்தம் நடந்ததாகவும், அதில் இருந்து ஆஷிகா மன உளைச்சலில் இருந்து வந்ததாகவும் தெரிய வந்துள்ளது. இதை அடுத்து போலீசார் ஆஷிகாவின் செல்போனை சோதனை செய்து வருகின்றனர். முழுமையான விசாரணைக்கு பின்பு ஆஷிகா எப்படி இறந்தார்? என்பது தெரியவரும் என போலீசார் தெரிவித்தனர். அவர் தற்கொலை செய்து கொண்டாரா? அல்லது மருத்துவமனை மூன்றாவது மாடியில் இருந்து தவறி விழுந்து இறந்தாரா? என்பது குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது. இது குறித்து ஆசியாவின் தாய் சுதாராணி என்பவர் மார்த்தாண்டம் போலீசில் புகார் செய்தார்.

போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# கோவை மலுமிச்சம்பட்டியில் பயணியர் நிழற்குடை திறப்பு விழா



கோவை ஜூலை:29

கோவை மலுமிச்சம்பட்டி பகுதியில் பொது மக்கள் பயன்பாட்டிற்காக புதிதாக அமைக்கப்பட்டுள்ள பயணியர் பேருந்து நிறுத்தத்தை பொதுமக்கள் முறையாக பயன்படுத்த வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு பேருந்து நிழற்குடை திறப்பு விழா நடைபெற்றது. நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அ.பவன் குமார் ரெட்டி கலந்து கொண்டு பொதுமக்களுக்கு பயணியர் பாதுகாப்பு மற்றும் சாலை பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு உரையாற்றினார். முன்னிலை கருமத்தம்பட்டி காவல் துணைக் கண்காணிப்பாளர் எஸ்.கரிகால் பாரி சங்கர், செட்டிபாளையம் காவல் நிலைய ஆய்வாளர் எம்.எம்.செல்வராகவன், நல் ஒலி அறக்கட்டளை,கருமத்தம்பட்டி உட்கோட்ட காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் காவலர்கள் உடன் இருந்தனர்.

நிகழ்ச்சிக்கு சார்க் குழும நிறுவனர் மற்றும் அமைப்பாளர் ப.முருகேசன் தலைமை வகித்தார். உடன் பொதுமக்கள் தொழிலாளர்கள் மற்றும் வாகன ஓட்டிகள் உள்ளிட்ட அனைவரும்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

# பல்வேறு துறைகளில் சாதனை படைத்தவர்கள் பத்ம விருது பெற விண்ணப்பிக்கலாம்; 31 ஆம் தேதி கடைசி நாள்

தஞ்சாவூர் ஜூலை 29

தஞ்சாவூர் மாவட்டத்தில் பல்வேறு துறைகளில் சாதனை படைத்தவ ர்கள் பத்ம விருது பெற விண்ணப்பிக்க வருகிற 31ஆம் தேதி கடைசி நாள் என அறிவிக்கப்பட்டுள்ளது இது குறித்து தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் ரேவதி விடுத்துள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:

தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் பல்வேறு துறைகளில் தலைசிறந்து விளங்கு பவர்களுக் கும், சாதனை புரிந்தவர்களுக்கும் பத்ம விருதுகள் வழங்கப்படுகிறது இந்த விருதுக்கு இலக்கியம் மற்றும் கல்வி விளையாட்டு, மருத்துவம், சமூகப் பணி, அறிவி யல் மற்றும் பொறியியல் பொது விவகாரங்கள், அரசு குடிமையை பணி, வர்த்தகம் மற்றும் தொழில் போன்ற அனைத்து துறைகளிலும் பிரிகளிலும் சிறந்த சாதனைகள் செய்வதற்கான இவ்விருது வழங்க ப்படுகிறது .

இதர துறைகளில் தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் சாதனை புரிந்தவர்கள் தகுதி உடையவர்கள் ஆவர். பத்ம விருதுக்கான பத்ம விபூஷன், பத்ம பூஷன் மற்றும் பத்மஸ்ரீ ஆகிய விருதுகள் இந்திய அரசால் வழங்கப்பட உள்ளது இவ் விருது வருகின்ற 2027 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் தேதி குடியரசுதினத்தன்று வழங்கப்பட உள்ளது

எனவே தஞ்சாவூர் மாவட்டத்தில் விளையாட்டு துறையின் தேசிய மற்றும் பன்னாட்டு அளவில்சாதனைபுரிந்தவர்கள் இவ்விருதுக்கு விண்ணப்பிக்கலாம் விண்ணப் பங்கள் மற்றும் இதர விவரங்கள் பெற www. padmaawards. gov.inஎன்ற இணையதளத்தை பார்வையிட லாம். இதற்கு விண்ணப்பிக்க வருகிற 31 ஆம் தேதி வெள்ளிக் கிழமை கடைசி நாளாகும்

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது

# ஜோலார்பேட்டை அடுத்த பொன்னேரி ஊராட்சியில் பண்ணைக் குட்டை அமைக்கும் பணியினை மாவட்ட ஆட்சியர் ஆய்வு



திருப்பத்தூர்: ஜூலை:29,

திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பொன்னேரி ஊராட்சி, முதலைமேடு பகுதியில், வளர்ச்சியடைந்த பாரதம் கிராம வேலை உறுதி மற்றும் வாழ்வாதார திட்டத்தின்கீழ் (VB GRAM G). ரூ.7.30 இலட்சம் மதிப்பீட்டில், பண்ணைக்குட்டை அமைக்கும் பணி நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சியர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணியின்தரம், முன்னேற்றம் மற்றும் திட்டமிட்ட காலத்திற்குள் பணியை நிறைவு செய்ய வேண்டிய அவசியம் குறித்து அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், மழைநீர் சேகரிப்பு மற்றும் நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தும் வகையில் இத்திட்டம் பொதுமக்களுக்கு பயனுள்ளதாக அமையும் என்றும், பணிகளை தரமானமுறையில்விரைந்து நிறைவேற்றுமாறும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது ஊராட்சி மன்ற தலைவர் நந்தினி அருள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தஹரிகுமார். சங்கர், ஊரக வளர்ச்சித்துறை பொறியாளர் முருகேசன் மற்றும் தொடர்புடைய துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.



# திருச்செந்தூர் அய்யா வைகுண்டர் அவதார பதியில் ஆடித் தேரோட்டம் கோலாகலம்.!

திருச்செந்தூர், ஜூலை:29

திருச்செந்தூர் அய்யா வைகுண்டர் அவதார பதியில், 194வது வைகுண்டர் ஆண்டு ஆடித் திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் கோலாகலமாக நடைபெற்றது.

திருச்செந்தூர் கடற்கரையோரம் அமைந்துள்ள அருள்மிகு அய்யா வைகுண்டர் அவதார பதியில் ஆடித் திருவிழா கடந்த ஜூலை 17ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழா நாட்களில் நாள்தோறும் அய்யா வைகுண்டர் பல்வேறு வாகனங்களில் எழுந்தருளி பதிவலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

திருவிழாவின் 11ம் நாளான்று முக்கிய நிகழ்வானதேரோட்டம்நடைபெற்றது. இதையொட்டி காலையில் உகப்படிப்பு, பணிவிடை மற்றும் உச்சிப்படிப்பு ஆகிய சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன. பிற்பகலில் அய்யா வைகுண்டர் அலங்கரிக்கப்பட்ட தேரில் எழுந்தருளி பதியைச் சுற்றிப் பவனி வந்து பக்தர்களுக்குக் காட்சியளித்தார். இதில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு சுருள் வைத்து வழிபட்டனர்.

தேரோட்டத்தை அய்யாவழி அகில திருக்குடும்ப மக்கள் சபைதலைவர் வள்ளியூர் எஸ். தர்மர், நான்குநேரி சட்டமன்ற உறுப்பினர் ரெட்டியார்பட்டி நாராயணன் ஆகியோர் வடம்பிடித்துத் தொடங்கி வைத்தனர். தொடர்ந்து பொதுமக்களுக்கு அன்னதர்மம் வழங்கப்பட்டது. இரவு அய்யா வைகுண்டர் காளை வாகனத்தில் பதியைச் சுற்றிப் பவனி வந்தார். இந்நிகழ்ச்சியில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

சட்டமன்ற உறுப்பினரின் கோரிக்கை:

தேரோட்டத்தில் பங்கேற்ற பின் செய்தியாளர்களிடம் பேசிய நான்குநேரி சட்டமன்ற உறுப்பினர் ரெட்டியார்பட்டி நாராயணன் தெரிவித்ததாவது: "அய்யா வைகுண்டர் அவதார நாள் விழாவிற்குத் தற்போது கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களுக்கு மட்டுமே உள்ளூர் விடுமுறை வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், அய்யாவழி பக்தர்கள் தமிழ்நாடு முழுவதும் பரவலாக வசிப்பதால், வைகுண்டர் அவதாரநாளில் மாநிலம் முழுவதும் அரசுப் பொது விடுமுறை அறிவிக்க வேண்டும் எனப் பக்தர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். இக்கோரிக்கையை முதலமைச்சர் விஜய்யின் கவனத்திற்குக் கொண்டு சென்று நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும்." என்றார்.

# அரசு வக்கீல் பதவிக்கு பெண் வக்கீலிடம் பேரம் பேசிய தவெக நிர்வாகி நீக்கம்

நாகர்கோவில், ஜூலை. 29

தமிழகத்தி ல் தற்போது புதிய ஆட்சி அமைந்துள்ளதை தொடர்ந்து கடந்த ஆட்சி காலத்தில் பொறுப்பில் இருந்த அரசு வக்கீல்கள் அனைவரும் ராஜினாமா செய்தனர். அதனை தொடர்ந்து புதிய அரசு வக்கீல்கள் நியமனம் நடைபெற்று வருகின்றன.

குமரி மாவட்டத்திலும் புதிய அரசு வக்கீல்கள் நியமிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த நிலையில் இந்த பதவிக்காக தெவெக நிர்வாகி ஒருவர் பெண் வக்கீல் ஒருவரிடம் ரூ.15 லட்சம் கேட்டு பேரம் பேசிய ஆடியோ சமூக வலைத்தளங்களில் வைரலானது. இது தவெக கட்சியினரிடையேயும், பொது மக்களிடமும் மிகுந்த பரபரப்பு ஏற்படுத்தியது.

அந்த ஆடியோ உரையாடலில், பெண் வழக்கறிஞரிடம் நீங்கள் கட்சியில் இணைந்தவர் என்பதால் உங்களது பெயரை அரசு வழக்கறிஞர் பொறுப்பில் பரிந்துரைக்க ரூ. 15 லட்சம் தந்தால் அதற்கான ஏற்பாடுகளை செய்ய முடியும் என நிர்வாகி கூறுகிறார். மேலும் பணத்தை தயார் செய்ய முடியுமா? என அவர் கேட்கிறார். அதற்கு பெண் வக்கீல் என்னால் அவ்வளவு பெரிய தொகையை தர முடியாது என மறுக்கிறார். மேலும் பணம் சம்பாதிக்க வேண்டும் என்பது எனது நோக்கம் அல்ல. நான் வழக்கறிஞராக பதிவு செய்து 7 ஆண்டுகள் ஆகிறது என்று அந்த பெண் வக்கீல் கூறுகிறார்.

கட்சிக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் வெளியான இந்த ஆடியோ விவகாரம் குறித்து கட்சியின் தலைமை தீவிர கவனம் செலுத்தி விசாரித்தது.

இந்த நிலையில் கட்சியின் கன்னியாகுமரி மத்திய மாவட்ட செயலாளர் கிருஷ்ணகுமார் நேற்று அறிக்கை வெளியிட்டுள்ளார். அதில் கன்னியாகுமரி மத்திய மாவட்ட செயற்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்து வந்த அனீஸ் குமார் கட்சிக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் செயல்பட்டது கண்டறியப்பட்டுள்ளது. எனவே அவர் பொறுப்பிலிருந்து உடனடியாக தற்காலிகமாக நீக்கப்படுகிறார். என்று குறிப்பிட்டுள்ளார். கட்சி ஒழுக்கத்தை மீறும் இது போன்ற செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# தஞ்சாவூரில் 6 நாட்கள் நடந்த அகில இந்திய கால்பந்து போட்டியில் கேரளா போலீஸ் அணி சாம்பியன் வெற்றி பெற்ற அணிகளுக்கு ரூபாய் 8 லட்சம் பரிசுகள் வழங்கப்பட்டன



தஞ்சாவூர் ஜூலை 29

தஞ்சாவூரில்6 நாட்கள் நடந்தஅகில இந்திய கால் பந்து போட்டியில் கேர ளா மாநிலபோலீஸ் அணி சாம்பி யன் பட்டத்தை தட்டி சென்றது

தஞ்சாவூர் பரிசுத்தம் நகரில் உள்ள கிட்டு கால்பந்து மைதானத் தில் அகில இந்திய அளவிலான மின்னொளி கால்பந்து போட்டி 6நாட்கள் நடந்தது .தினமும் மாலை 6 மணி தொடங்கி இரவு 1 மணி வரை மின்னொளியில் போட்டிகள் நடந்தன

நேதாஜி கால்பந்து கழகம் சார் பில் சிட்டி யூனியன் வங்கி, சிவசித ம்பரம் பிள்ளை ஜூவல்லரி இணை ந்து நடத்தி, போட்டியை தொழில் அதிபர் ரவி வம்பாளியார் தொடங்கி வைத்தார்

இந்த போட்டியில் தமிழகம், ஆந்திர, கேரளா, கர்நாடகம், மராட்டியம் ஆகிய மாநிலத்தைச் சேர்ந்த 20 அணிகள் கலந்து கொண்டன. இதன் இறுதிப்போட்டிக்கு கேரள போலீஸ் அணியும், தமிழ் நாடு தளபதி ஸ்டாலின் கால்பந்து அணி யும் தகுதி பெற்றது. இறுதிப் போட் டி விறுவிறுப்பாக நடந்தது

இதில் கேரளா போலீஸ் அணி10 என்ற கோள்களில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டத்தை தட்டி சென்ற து .தமிழ்நாடு தளபதி ஸ்டாலின் கால்பந்து அணி2வது இடத்தையும், யுனைடெட் கேரளா கால் பந்து அணி 3வது இடத்தையும், தமிழ் நாடு போலீஸ் அணி 4வது இடத்தை யும் தட்டி சென்றது. இறுதிப்போட்டியை தஞ் சாவூர் தெற்கு மாவட்ட காங்கிரஸ் முன்னாள் தலைவர் கிருஷ்ணசாமி வாண்டையார் தொடங்கி வைத்து, வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசுகளை வழங்கினார். இதில் முதல் பரிசாக ரூபாய் 2, இலட்சத்து 22 ஆயிரமும், 2வது பரிசாக ரூபாய் 1 இலட்சத்து11 ஆயிரமும்,3 வது பரி சாக 66 ஆயிரமும்,4 வதுபரிசாக 33 ஆயிரம் வழங்கப்பட்டன

இது தவிர அதிக கோள் அடித்த வர் ,சிறந்த வீரர், சிறந்த அணிகளு க்கும், சிறப்பு பரிசுகள் வழங்கப் பட் டன. வெற்றி பெற்று அணிகளுக்கு பரிசு கோப்பை மெடல் என மொத்த ம் ரூபாய் 8 லட்சம் மதிப்பில் வழங்கப்பட்டது

இதற்கான ஏற்பாடுகளை நேதாஜி கால்பந்து கழக செயலாளர் முருகதாஸ் மற்றும் கால் பந்து அணி நிர்வாகிகள் செய்திருந்தனர்

# ஈரோடு மாவட்ட மாபெரும் வேலைவாய்ப்பு முகாம்– மகத்தான பலன் பணி நியமன ஆணை பெற்றோர் முதலமைச்சருக்கு நெஞ்சார்ந்த நன்றி



ஈரோடு மாவட்டம்

கோபிசெட்டிபாளையத்தில் நடைபெற்ற மாபெரும் வேலை வாய்ப்பு முகாமில்

தேர்வு பெற்று பணி நியமன ஆணையினை பெற்றவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அனைத்து தரப்பு மக்களும் பயன்பெற வேண்டும் எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்று பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் கோபிசெட்டிபாளையத்தில் கடந்த (25.7.2026) அன்று நடைபெற்ற முகாமில் 332 முன்னணி தனியார் நிறுவனங்கள் பங்கேற்றது. இதில் பொதுப்பிரிவைச் சேர்ந்த 8,613 பேரும், மாற்றுத்திறனாளிகள் 55 பேரும் என மொத்தம் 8,668 வேலைநாடுநர்கள் கலந்து கொண்டனர். இவர்களில் பொதுப்பிரிவைச் சேர்ந்த 2,749 பேரும், மாற்றுத்திறனாளிகள் 25 பேரும் என மொத்தம் 2,774 வேலை நாடுநர்கள் பணிக்குத் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் திரு. கே.ஏ.செங்கோட்டையன் அவர்கள் மற்றும் மாண்புமிகு கைத்தறி, துணிநூல் மற்றும் காதித்துறை அமைச்சர் திரு.ம.விஜய் பாலாஜி அவர்கள் ஆகியோர் பணிநியமன ஆணை வழங்கினார்கள்.

மாபெரும் தனியார்த்துறை வேலை வாய்ப்பு முகாமில் கலந்துகொண்டு பணிநியமன ஆணைப்பெற்ற திரு.ஜி.எஸ். ஹரிஹரன் மகிழ்ச்சியுடன் தெரிவித்தாவது

நான் ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையத்தில் வசித்து வருகிறேன். எனது தந்தை திரு.செந்தில்குமார். எனது தந்தை நான் 7ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தபோது (2016ஆம் ஆண்டு) காலமானார். எனது தாயார் திருமதி.தமிழ்ச்செல்வி தையல் தொழில் செய்து குடும்பத்தைப் பராமரித்து வருகிறார். தந்தையின் மறைவிற்குப் பிறகு பல்வேறு சிரமங்களை எதிர்கொண்ட போதிலும், எனது தாயாரின் அயராத உழைப்பும் ஊக்கமும் காரணமாக எனது உயர் கல்வியை (எம்.பி,ஏ) தொடர்ந்து வெற்றிகரமாக முடித்தேன். கல்வியை முடித்த பின்னர், குடும்பத்தின் பொருளாதார சூழ்நிலை காரணமாக எனது கல்வித் தகுதிக்கேற்ற வேலைவாய்ப்பைத் தேடி பல்வேறு இடங்களுக்குச்சென்றேன். ஆனால், உரிய வேலைவாய்ப்பு கிடைக்கவில்லை. அப்போது மாவட்ட நிர்வாகம் சார்பில் நடைபெற்ற மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் குறித்து அறிந்து அதில் கலந்து கொண்டேன். இந்த முகாமில் ஒரே இடத்தில் பல முன்னணி நிறுவனங்கள் பங்கேற்று நேர்காணல் நடத்தியது எனக்கு மிகுந்த நம்பிக்கையை அளித்தது. நடைபெற்ற நேர்காணலில் வெற்றி பெற்று, எனது திறமைக்கேற்ற நிறுவனத்தில் பணிநியமன ஆணையை மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் திருக்கரங்களால் பெற்றுக் கொண்டேன். தற்போது ஜெனி மேக்னெட் நிறுவனத்தில் உள்ளடக்க எழுத்தாளராக (Content Writer) தேர்வு செய்யப்பட்டுள்ளேன். இப்பணியில் எனக்கு மாதம் ரூ.19,000ஊதியம் வழங்கப்படுகிறது. இந்த வேலைவாய்ப்பின்மூலம்எனதுகுடும்பத்தின் எதிர்காலம் குறித்த கவலை பெருமளவில் குறைந்துள்ளது. வேலைவாய்ப்புடன் மட்டுமல்லாமல், இளைஞர்களின் திறன்களை மேம்படுத்தும் பயிற்சிகள் மற்றும் தொழில்வழிகாட்டுதல்களையும் வழங்கி வரும் தமிழ்நாடு அரசின் இந்த முயற்சி மிகவும் பாராட்டத்தக்கது. இளைஞர்களின் வாழ்க்கையில் நம்பிக்கையையும், வேலைவாய்ப்பையும் உருவாக்கி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், இம்மாபெரும் வேலைவாய்ப்பு முகாமை சிறப்பாக நடத்தி எங்களைப் போன்ற இளைஞர்களுக்கு புதிய வாழ்வாதாரத்தை உருவாக்கிய மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் மாவட்ட நிர்வாகம் மற்றும் அனைத்து அலுவலர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாபெரும் தனியார்த்துறை வேலை வாய்ப்பு முகாமில் கலந்துகொண்டு

பணிநியமன ஆணைப் பெற்ற செல்வி ச.மோனிஷா மகிழ்ச்சியுடன் தெரிவித்தாவது

நான் ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டம், டி.என்.பாளையம் ஒன்றியம், அரக்கன்கோட்டை பகுதியில் வசித்து வருகிறேன். எங்கள் குடும்பத்தில் எனது பெற்றோர் மற்றும் இரண்டு தங்கைகள் உள்ளனர். எனது முதல் தங்கை 11ஆம் வகுப்பிலும், இரண்டாவது தங்கை 4ஆம் வகுப்பிலும் படித்து வருகின்றனர். எனது தந்தை வாகன ஓட்டுநராகப் பணிபுரிந்து வருகிறார். நான் நீண்ட நாட்களாக எனது கல்வித் தகுதிக்கேற்ற வேலைவாய்ப்பை எதிர்பார்த்து வந்தேன். கடந்த சனிக்கிழமை (25.07.2026) நடைபெற்ற மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு, நேர்காணலில் வெற்றி பெற்று பணிநியமன ஆணையை பெற்றது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியையும் தன்னம்பிக்கையையும் அளித்துள்ளது. நான் சிப்காட் தொழிற்சாலை வளாகத்தில் செயல்பட்டு வரும் பிரிட்டானியா பிஸ்கட் நிறுவனத்தில் கணினி இயக்குபவராக தேர்வு செய்யப்பட்டுள்ளேன். இப்பணியில் எனக்கு மாதம் ரூ.16,000 ஊதியம் வழங்கப்படுகிறது. ஒரே இடத்தில் பல முன்னணி தனியார் நிறுவனங்கள் பங்கேற்று ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கும் வகையில் இந்த முகாம் நடத்தப்பட்டிருப்பது மிகவும் பயனுள்ள முயற்சியாகும்.

இதுபோன்ற முகாம்கள் வேலைதேடும் இளைஞர்களின் நேரத்தையும் செலவையும் மிச்சப்படுத்துவதோடு, தங்களது திறமையை வெளிப்படுத்த சிறந்த வாய்ப்பையும் வழங்குகின்றன.

இளைஞர்களின் வேலைவாய்ப்பை உறுதி செய்து, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும்,

இந்நிகழ்வில் கலந்து கொண்டு பணிநியமன ஆணைகளைவழங்கிய மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாவட்ட நிர்வாகம் மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய அலுவலர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார். இவர்களை போன்ற இளைஞர்கள் தங்களது கல்வித் தகுதி, திறன் மற்றும் விருப்பத்திற்கு ஏற்ற பணிகளை ஒரே இடத்தில் தேர்வு செய்து கொள்ளும் வகையில் இத்தகைய வேலைவாய்ப்பு முகாம்கள்சிறப்பாகஅமைந்துள்ளன.

அதேபோல், தொழில் நிறுவனங்களும் தங்களுக்குத் தேவையான திறமையான மனிதவளத்தை நேரடியாகத் தேர்வு செய்து கொள்ளும் வாய்ப்பைப் பெறுகின்றன. எனவே, இத்தகைய வேலைவாய்ப்பு முகாம்கள் இளைஞர்களுக்கும் தொழில் நிறுவனங்களுக்கும் பயனளிக்கும் சிறந்த தளமாக விளங்கி வருகின்றன.

தொகுப்பு
சு.மகேஸ்வரன்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
செ.கலைமாமணி
உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி)
ஈரோடு மாவட்டம்

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.